**செய்தி வெளியீடு எண்: 823** **நாள்: 22.11.2019**

**இன்று (22.11.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தென்காசியில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட தென்காசி மாவட்டத்தினை தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

பொதிகையின் தென்றல் போல இதமான தமிழ் மணம் வீசும் தென்காசி வாழ் பெரியோர்களே!

நெஞ்சில் வீரமும், வாழ்வில் அறமும் தங்களது இரு கண்களாகக் கொண்ட தாய்மார்களே!

குற்றாலத்தின் ஆர்ப்பரிக்கும் நீர்வீழ்ச்சி போல இங்கு திரண்டு இருக்கும் எழுச்சிமிகு இளைஞர் பட்டாளங்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்காசி பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை, 33 ஆண்டு கால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து இன்றைக்கு தென்காசி மாவட்டம் உதயமாகியிருக்கின்றது. இந்த புதிய மாவட்டத்தை இன்றைய தினம் தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தென்காசி வரலாற்றில் இன்று முக்கியமான திருநாளாகும். தலைமுறைகள் ஏங்கிய கனவு, இன்று நனவாகி உள்ளது. இந்த இனிய நாளில் உங்கள் அனைவரையும் காண்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**“என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்”** என்று பாடினார் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அந்த வகையில், மலை வளம், காடு வளம், நீர் வளம், பயிர் வளம், தமிழ் வளம், வரலாற்று வளம் என பல்வேறு வளங்களும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு மாவட்டமாக உருவெடுத்துள்ளது இந்த தென்காசி மாவட்டம். குறிஞ்சி, முல்லை, மருதம் என மூவகை நிலமும் கொண்ட இந்த முத்தான மாவட்டத்தை உருவாக்கியதில் மாண்புமிகு அம்மாவின் அரசு பெருமை கொள்கிறது, மகிழ்ச்சி அடைகிறது.

மக்களின் விருப்பங்கள் மற்றும் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் போலவே, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் அறிவிப்புகளை தமிழக சட்டசபையில் அறிவித்து, அதனைச் செயல்படுத்தி வருகிறது என்பதை இங்கே பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ‘‘**அடித்தட்டு மக்களின் உணர்வுகளையும் அறிந்து, உள்ளாட்சி நிர்வாகம் அமைய வேண்டியது அவசியம்**’’ என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வகையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலையும் விரைவில் நடத்த இருக்கிறது மாண்புமிகு அம்மாவின் அரசு. அதற்குண்டான நடவடிக்கையில் மாநில தேர்தல் ஆணையம் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. புதிதாக மாவட்டங்கள் உருவாக்கப்படுவதற்கும், உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படுவதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. 2018–ஆம் ஆண்டில் ஏற்கனவே புதியதாக மறுவரையறுக்கப்பட்டு வெளியிடப்பட்ட வார்டுகளின் அடிப்படையிலேயே தமிழ்நாடு மாநில தேர்தல்

ஆணையத்தால் உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். இதுகுறித்து தேர்தல் ஆணையம் பலமுறை அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. மாநில தேர்தல் ஆணையம் பல மாவட்டங்களுக்குச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சந்தித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் சிலர் இதற்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எந்த முட்டுக்கட்டை வந்தாலும், விரைவாக உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கான பணிகள் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதுகுறித்த செய்திகள் வந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், முந்தைய ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட மாவட்டம். சுதந்திரத்திற்குப் பின்னர், பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பு வகித்த காலத்தில், **1986**–ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து தூத்துக்குடியை தலைநகரமாகக் கொண்டு புதிய மாவட்டமாக தூத்துக்குடி மாவட்டத்தை உருவாக்கினார். அதைத் தொடர்ந்து, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாஅவர்களும் பல்வேறு புதிய மாவட்டங்களைத் தொடங்கினார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் பல்வேறு புதிய மாவட்டங்களை உருவாக்கி, இன்றைக்கு நிர்வாகம் சிறப்பாக இருப்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அரசு அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஜுலை மாதம் நான் தென்காசியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலே கலந்து கொண்டபோது, பலதரப்பட்ட மக்களால் பல ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வந்த புதிய தென்காசி மாவட்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது என்று நான் தெரிவித்தேன். அதன்படி, ஜுலை மாதம் **18–**ஆம் தேதி சட்டப்பேரவை விதி **110–**ன்கீழ் தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பை நான் சட்டமன்றத்தில் வெளியிட்டேன். அந்த அறிவிப்பிற்கிணங்க, புதிய தென்காசி மாவட்டம் தோற்றுவிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுச்சூழல் கொண்ட மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் தென்காசி மாவட்டம் அமைந்துள்ளது. குற்றால அருவி அருகாமையில் உள்ளதால் அதிக அளவிலான சுற்றுலா பயணிகள் வருகை தரும் ஒரு நகரமாக தென்காசி உள்ளது. இந்த ஊர், பருவமழைத் தூறலுக்கு பெயர் பெற்றது. மக்கள் இதனை சாரல்மழை என்றும் அழைப்பதுண்டு. இதனைக் கொண்டாடும் வகையில் ஆண்டு தோறும் ‘‘**சாரல் விழா**’’ தமிழ்நாடு அரசால் கொண்டாடப்படுகின்றது.

இந்த மேற்குத் தொடர்ச்சி மலைதான் இப்பகுதியில், பொதிகை மலை என அழைக்கப்படுகிறது. இந்தப் பொதிகை மலையின் பெருமையைக் கூறும் போது, ராமாயணத்தில் நடந்த நிகழ்வு ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

இலங்கைக்குச் சென்று சீதை இருக்கும் இடத்தைக் கண்டறிந்து வரும்படி அனுமனுக்கு ராமன் கட்டளையிடுகிறார். அப்போது, அனுமனுக்கு அறிவுரை கூறும்போது ‘அனுமனே, நீ இலங்கைக்குச் செல்லும்போது, பொதிகை மலை வழியாக சென்று விடாதே! உன்னை வெல்லக்கூடியவர் அங்கே இருக்கிறார் என்றார். அதிர்ச்சியடைந்த அனுமன், ‘அப்படிப்பட்ட வல்லமை மிக்கவர் யார்? என்று கேட்கிறார்.’ “பொதிகை மலைச் சாரலில் எப்போதும் பாடிக் கொண்டிருக்கும் அகத்தியர்தான் அவர். நீ போகும் போது அவர் பாடலில் மயங்கி, அங்கேயே தங்கி விட்டால், சீதை இருக்குமிடத்தை யார் கண்டுபிடிப்பது?” என்றார் ராமர். அப்படிப்பட்ட பழமையும், பெருமையும் மிக்கது இந்த பொதிகை மலை. அப்படிப்பட்ட இசைச்சாரலைத் தன்னகத்தே கொண்ட மாவட்டம்தான் இன்று புதிதாகத் தொடங்கப்பட்ட தென்காசி மாவட்டமாகும்.

முன்னொரு காலத்தில் செண்பக மரங்கள் நிறைந்த செண்பகப் பொழிலை சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்த பராக்கிரம பாண்டிய மன்னனின் கனவில் தோன்றிய சிவபெருமான், தெற்கில் உள்ள என்னுடைய பக்தர்கள் சிலர், வடக்கில் உள்ள காசிக்கு பாதயாத்திரை செய்து எளிதாக வந்தடைய முடியவில்லை என்றும், அதனால் அதற்கு நிகரான ஒரு நகரத்தைக் கட்டி தென் பகுதி மக்களும் என் அருள் பெற வழிபாட்டுத் தலம் அமைக்க ஆணையிட்டார். அதனை ஏற்று, பராக்கிரம பாண்டிய மன்னரால் கட்டப்பட்டதுதான் தென்காசி கோயில் ஆகும். இந்தக் கோயிலின் பெயராலேயே இந்த ஊரும் தென்காசி என்று அழைக்கப் பெற்றது.

ஹரியும், சிவனும் ஒன்றே என உலகுக்கு உணர்த்த விரும்பிய கோமதியம்மன், இறைவனை வேண்டி ஒற்றைக் காலில் தவமிருந்தாள். அன்னையின் தவத்தில் மகிழ்ந்த

சிவபெருமான், சங்கரநாராயணராக சங்கரன்கோவிலில் காட்சி அளித்தார். இந்த வைபவமே "**ஆடித்தபசு**" திருவிழாவாக ஆண்டுதோறும் சங்கரன்கோவிலில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டைப் பகுதி பல்வேறு போராட்டங்கள் மூலம் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது. அப்போராட்டங்களை முன்நின்று நடத்தி தன்னலம் பாராமல் உழைத்த அனைத்து பெரியோர்களையும் நினைவுகூரும் வண்ணம், மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த நவம்பர் **1–**ஆம் நாள் "**தமிழ்நாடு நாள்**" விழாவாக சீருடனும், சிறப்புடனும் கொண்டாடியதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

வீரகேரளம் புதூர் பற்றி சிறப்பித்துக் கூற விரும்பிய தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள், "**தமிழ் காத்த புலவர்களுக்கு அடைக்கலம் வழங்கிய ஊற்றுமலை ஜமீனைக் கொண்ட வீரகேரளம் புதூர்",** என்றார்.

நெல்லை மாவட்டம் பரந்து விரிந்து இருப்பதால், மக்கள் தங்கள் அடிப்படை வசதிகளுக்காக மாவட்டத் தலைநகரான திருநெல்வேலிக்கு சுமார் ஒன்றரை மணி நேரம் வரை பயணிக்க வேண்டியுள்ளது. பொதுமக்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்வது தவிர்க்க முடியாதது என்பதால், அவர்களுக்கு இந்தப் பயணம் பொருட்செலவு மட்டுமல்லாமல், கால விரயத்தினையும் ஏற்படுத்துகிறது. எனவே, மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டும், அவர்களின் **33** ஆண்டுகால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும் உதயமானது தான் இந்தத் தென்காசி மாவட்டம். இம்மாவட்டத்தின் சிறப்பு விவரங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- தென்காசி நகரம் இந்த மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கும்.
- இந்த மாவட்டத்தின் பரப்பளவு 2,916.13 சதுர கிலோ மீட்டர்.
- புதிதாக தொடங்கப்பட்ட இந்த தென்காசி மாவட்டத்தின் மக்கள் தொகை 14 லட்சத்து 7 ஆயிரத்து 627.
- இம்மாவட்டத்தின் வருவாய்க் கோட்டங்கள், தென்காசி மற்றும் சங்கரன்கோவில். புதிதாக சங்கரன்கோவில் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர், சிவகிரி, வீரகேரளம் புதூர், சங்கரன்கோவில், திருவேங்கடம், ஆலங்குளம் ஆகிய 8 வட்டங்களும், 30 பிர்க்காக்களும், 251 வருவாய் கிராமங்களும் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கி உள்ளன.
- உள்ளாட்சி நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில், கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், செங்கோட்டை, தென்காசி ஆகிய நகராட்சிகளும், கடையம், கடையநல்லூர் உட்பட 10 ஊராட்சி ஒன்றியங்களும், அவற்றில் 224 கிராம ஊராட்சிகளும் மற்றும் குற்றாலம், சிவகிரி உட்பட 18 பேரூராட்சிகளும் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கி உள்ளன.
- சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியின் ஒரு பகுதி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர், தென்காசி, ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியின் ஒரு பகுதி என 5 சட்டமன்ற தொகுதிகள் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கி உள்ளன.

இந்த மாவட்டத்தில் பேரூராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், தாலுக்காக்கள், கோட்டங்கள் என்று இன்றைக்கு உருவாக்கப்பட்டு

இந்த மாவட்டம் இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

- புகழ்பெற்ற குற்றாலக் குறவஞ்சி எழுதிய திரிகூடராசப்பக் கவிராயர், ரசிகமணி டி.கே.சி., தியாகி சட்டநாதக் கரையாளர், வீரன் வாஞ்சிநாதன் ஆகியோர் இம்மாவட்டத்தில் பிறந்து பெருமைப்படுத்தியவர்கள்.
- சுதந்திர போராட்ட வரலாற்றில் முக்கிய பங்காற்றிய பாளையக்காரர்களில் வீரன் பூலித்தேவனும், தளபதி ஒண்டிவீரனும் முதன்மையானவர்கள். அவர்களையும் பெற்றுத் தந்தது இந்த மாவட்டம்தான்.

விவசாய பெருங்குடி மக்களின் நலனுக்காக, ராமநதியின் வெள்ள நீரினை தென்காசி, ஆலங்குளம் வட்டங்களில் உள்ள ஜம்புநதியின் பாசனப் பகுதிகளுக்கு திருப்பும் திட்டத்திற்கான நிர்வாக ஆணைகள் வழங்கப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

- செண்பகவல்லி அணைக்கட்டு மற்றும் கன்யாமதகு கால்வாய் சீரமைப்பு தொடர்பாக மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நானே கேரளாவிற்கு சென்று, கேரள முதலமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து நீராதார பிரச்சனைகளைத் தீர்க்க முனைந்து வருகின்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கே வருகின்றபொழுது விவசாய சங்கத்தைச் சேர்ந்த ஒரு நிர்வாகி செண்பகவல்லி அணைக்கட்டுப் பிரச்சினையை தீர்த்து வையுங்கள் என்று சொன்னார்.

விவசாயிகளின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு எங்களுடைய அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு இதுபோன்ற மக்கள் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

வேளாண் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் காரணமாக, கடந்த எட்டு ஆண்டுகளில் ஆறாவது முறையாக மாநிலத்தின் உணவு உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி சாதனை படைத்த அரசு அம்மாவின் அரசு என்பதை நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அகில இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடி முறைக்கென்று, பிரத்யேகமாக எந்த சட்டமும், எந்த மாநிலத்திலும் இதுவரை இயற்றப்படாத நிலையில், தமிழ்நாடு அரசுதான் முதன் முதலில் தனிச் சட்டம் ஒன்றை வடிவமைத்துள்ளது என்பது தனிச்சிறப்பாகும். இது விவசாயிகளுக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாகும்.

**''கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி, பயில வகை செய்தல் எனது நோக்கம்''** என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மா வழியில் வந்த எங்களுடைய அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும்

துவக்கி இன்றைக்கு ஒரு சாதனை படைத்த அரசாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, இன்றைக்கு தமிழகத்திலே உயர் கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தியாவிலேயே அதிகளவில் உயர் கல்வி பயிலக்கூடிய முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நாம் பெற்றிருக்கின்றோம். கிட்டத்தட்ட 49 சதவிகிதம் பேர் தமிழகத்தில் உயர்கல்வி படித்துக் கொண்டிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 2011–ல் முடிவு பெற்று, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்திலே நான் உயர்கல்விக்கு முன்னுரிமை கொடுப்பேன் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில், புதிய கல்லூரிகளை உருவாக்கினார்கள். அப்படி உருவாக்கியதன் விளைவு இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையில் இந்திய அளவிலேயே முதல் மாநிலம் என்ற பெருமையைப் பெற்ற அரசு எங்களுடைய அரசு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியிலே நாங்கள் சென்னையில் நடத்தினோம். 3 லட்சத்து 431 கோடி ரூபாய் தொழில் முதலீட்டை ஈர்த்தோம். 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டோம். இதன் வாயிலாக ஏறக்குறைய 10 இலட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தந்த அரசு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மகிழ்ச்சியோடு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன். எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆட்சியில் புதிய தொழில்கள் வரவில்லை என்றும், அதனால் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் பொய்யான செய்தியை பரப்பி வருகின்றார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதத்திலே இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் **2015–**ஆம் முதன்முதலாக உலக முதலீட்டாளர் மாநாட்டை சென்னையிலே நடத்தினார்கள். அதன் வழியிலே எங்களுடைய அரசும் சென்னையிலே **2019–**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாட்டை நாங்கள் நடத்தியதன் விளைவாக, தொழில் முதலீட்டாளர்கள் வெற்றிகரமாக இன்றைக்கு தமிழகத்திலே தொழில் தொடங்கக்கூடிய நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

நிலத்தடி நீரை செறிவூட்டி வேளாண் பணிகளை மேற்கொள்ள வகை செய்யும் குடிமராமத்துத் திட்டம், அற்புதமான திட்டம், தமிழகம் மட்டுமல்ல இந்தியத் திருநாடே வியக்கின்ற அளவிற்கு குடிமராமத்துத் திட்டத்தை வெற்றிகரமாக நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். தமிழகத்திலே பருவமழை நன்றாகப் பொழிந்திருக்கின்றது. நான் வருகின்ற வழியிலே பார்த்தேன். ஏரிகள், குளங்கள் எல்லாம் நிரம்பியிருக்கின்றன. அந்த ஏரிகள், குளங்கள் முழுவதும் நிரம்புவதற்கு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கண்ட கனவை, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா கண்ட அந்தக் கனவை எல்லாம் நிறைவேற்றுகின்ற விதமாக, இன்றைக்கு நீர் மேலாண்மைத் திட்டம் என்ற அற்புதமான திட்டத்தை தமிழகத்திலே துவக்கி, குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக கிராமங்களில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், ஊரணிகள், குட்டைகள் அனைத்தும் இன்றைக்கு தூர்வாரப்பட்ட காரணத்தினாலே பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர்

ஒரு சொட்டுகூட வீணாகாமல் தேங்கி நிற்கின்ற காட்சியை இப்பொழுது நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட சாதனைகளைப் படைத்த அரசு எங்களுடைய அரசு. குடிமராமத்துத் திட்டத்திற்காக முதற்கட்டமாக 2016–17ஆம் ஆண்டில் ரூபாய் 100 கோடி ஒதுக்கியிருந்தோம். 2017–18ஆம் ஆண்டில் அம்மாவினுடைய அரசு ரூபாய் 328 கோடியை ஒதுக்கியது. 2018–19ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட ரூபாய் 500 கோடி ஒதுக்கியிருக்கின்றோம். அந்தப் பணிகள் எல்லாம் முடிவுற்றுள்ளன. இன்னும் சில பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருகின்ற காலத்தில் விடுபட்டுள்ள ஏரிகளும் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்டு அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகள் அனைத்தும் தூர்வாரப்படும் என்ற செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதனுக்கு உயிர் எப்படி முக்கியமோ அதேபோல், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், பொதுமக்கள் குடிப்பதற்கும் நீர் மிக முக்கியம். ஆகவே, உயிராக இருக்கின்ற நீரை சேமிப்பது நமது தலையாய கடமை. அது தான் எங்களுடைய இலட்சியம். அந்த இலட்சியத்தில் நாங்கள் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, கிராமங்களில் சிறு குளங்கள், ஊரணிகள், குட்டைகள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அந்த ஊரணிகள், குளங்கள், குட்டைகளை எல்லாம் தூர்வார வேண்டுமென்பதற்காக, ரூபாய் 1250 கோடி நிதி ஒதுக்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு. இதன் விளைவாக, ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகின்ற ஏரிகள் தூர்வாரப்பட்டு

தண்ணீர் தேங்கி, குடிப்பதற்கு, விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. குடிமராமத்துத் திட்டத்தை நிறைவேற்றிய ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை அனைத்துத் தமிழர்களின் இல்லங்களிலும், சிறப்பாக தைப் பொங்கல் கொண்டாட வேண்டுமென்பதற்காக கடந்த ஆண்டு தைப்பொங்கலன்று எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு. அதிலும் நாங்கள் தான் சாதனை படைத்தோம். இதைக்கூட பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். ஆனால், நீதியரசர்கள் ஏழைகளுக்குக் கொடுப்பதைத் தடுக்க வேண்டாமென்று நல்ல தீர்ப்பை வழங்கிய காரணத்தினாலே அந்த ஆண்டு தைப் பொங்கல் திருநாளை தமிழக மக்கள் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

இன்றைக்கு மண்வளம் குன்றிப் போயிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு பல்வேறு இடங்களில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படுகின்ற பிளாஸ்டிக் பல்வேறு இடங்களில் குவியல், குவியலாக இருக்கின்றன. தமிழகத்தில் இப்படிப்பட்ட நிலைகள் மாற வேண்டும் என்பதற்காக ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படுகின்ற நெகிழியை தடைசெய்து அதை நடைமுறைப்படுத்திய அரசு அம்மாவின் அரசு. இன்றையதினம், பாரதப் பிரதமர் அவர்களும், இந்தியா முழுவதும் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழியை தடை செய்ய வேண்டும், அதை பயன்படுத்த வேண்டாம் என்று அறிவித்திருக்கின்றார்கள். கேரள முதலமைச்சர் அவர்கள், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழியை கேரள மாநிலத்தில் தடை செய்யப்படும் என்ற

அறிவிப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். நெகிழித் தடையை நாம் முதன்முதலாக கொண்டு வந்ததைப் பின்பற்றி, இந்தியாவிற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். வருங்கால சந்ததியினரின் நலனைக் கருத்தில் கொண்டு, நெகிழி ஒழிப்பை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று இந்தத் தருணத்தில் உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

2017–2018 முதல் 2019–2020 முடிய மூன்றாண்டுகளில், சட்டமன்ற விதி எண். 110–ன் கீழ் தமிழகத்தில் பல்வேறு நலத் திட்டங்களை தொடங்க வேண்டும் என்பதற்காக அறிவிக்கப்பட்ட 453 அறிவிப்புகளில் 368 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிட்ட ஒரே அரசு அம்மாவின் அரசு. இதுபோன்ற புதிய திட்டங்கள் வாயிலாக நாட்டு மக்களுக்கு நன்மைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் சட்டமன்ற விதி எண்.110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் செல்கின்ற பக்கம் எல்லாம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருந்தபொழுதும், நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து மூன்றாண்டு காலத்திலும் சட்டப்பேரவையில் சட்டமன்ற விதி எண்.110–ன் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள் என்னவாயிற்று என்று கேட்கிறார். அதற்கெல்லாம் விளக்கம் அளிக்கின்ற விதத்திலே, நாட்டு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தச் செய்தியை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். 453 அறிவிப்புகள் நான் வெளியிட்டேன், அதில் 88 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன, 280 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன. 74 அறிவிப்புகளுக்கு, திட்டப்

பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 9 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன, 2 அறிவிப்புகள் சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இன்றைக்கு தவறான பிரச்சாரத்தை தமிழகத்தில் பரப்பி வருகின்றார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதமாகத்தான் இந்த விளக்கத்தை நான் இங்கே தெரிவித்திருக்கின்றேன்.

நான் பல்வேறு மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செல்கின்றபோது அங்கே இருக்கின்ற தாய்மார்கள், ஏழை எளிய மக்கள் என்னிடத்திலே கொடுக்கின்ற கோரிக்கை மனுக்களில் பெரும்பாலானவை முதியோர் உதவித் தொகை, வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும், பட்டா மாறுதல் செய்துதர வேண்டும் என்பதுதான். இதற்கெல்லாம் தீர்வு காண வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தை நான் அறிவித்தேன். அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர்களும், மாவட்ட அமைச்சர்களும் கிராமங்களுக்கே சென்று, மனுக்களைப் பெற்றுத் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டதன் அடிப்படையில், தமிழகம் முழுவதும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக 9 லட்சத்து 72 ஆயிரத்து 216 மனுக்கள் வரப்பெற்றன, இது வரலாற்றுச் சாதனை. ஏழை, எளிய மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்று எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். ஆகவே, இதை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகக் கருதுகின்றோம். பல ஆண்டுகாலமாக தீர்க்கப்படாத பிரச்சினைகளை தீர்த்து வைக்க எங்களுடைய அரசு முயற்சி செய்திருக்கிறது, அதன் வாயிலாக பெறப்பட்ட 9,72,216 மனுக்களில், தகுதியான 5,11,186 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, நலத்திட்ட உதவிகள்

வழங்கப்பட்டன. 23,538 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக் கொள்ளப்படாத 4,37,491 மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கிறேன். அதில் தகுதியான மனுக்கள் இருந்தால், அவற்றிற்கும் நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமென்றும், ஏழை, எளிய மக்களால் கொடுக்கப்பட்ட மனு எந்தக் காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது என்ற விவரத்தையும் மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டுமென்ற உத்தரவையும் நான் வழங்கியிருக்கின்றேன்.

முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான சொத்து மதிப்பு ரூ.50,000–க்குள் இருக்கவேண்டும், அதற்கு மேல் சொத்து இருந்தால் முதியோர் உதவித் தொகை நிராகரிக்கப்படும் என்ற விதிமுறைகள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான சொத்து மதிப்பை ரூ. 50,000–லிருந்து ரூபாய் 1 லட்சமாக உயர்த்தி, அறிவிப்பைத் தந்து அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கின்றோம். ஆகவே, ஏழை, எளிய மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசாக எங்களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விழைகின்றேன். முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக தென்காசி மாவட்டத்தில் மட்டும் 4,433 மனுக்கள் பெறப்பட்டன, இதில் 2,835 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தீர்வு காணப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் மாவட்ட மக்கள் மருத்துவ வசதி பெறவேண்டும் என்பதற்காக தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை கொண்டுவரவேண்டுமென்று இதயதெய்வம் புரட்சித்தலைவி

அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள். அம்மா வழியில் வந்த எங்களுடைய அரசு அதை நிறைவேற்றுவதற்காக முழு மூச்சோடு பாரதப் பிரதமர் அவர்களோடு தொடர்பு கொண்டு, பல நேரங்களில் நான் நேரடியாக பாரதப் பிரதமரை சந்திக்கின்றபொழுதெல்லாம் எடுத்துச் சொன்னதன் விளைவாக, மதுரை மாவட்டம், தோப்பூரில் ரூபாய் **1,500** கோடி மதிப்பீட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை பாரதப் பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் துவங்க அடிக்கல் நாட்டப்பட்டது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற மிகப்பெரிய சாதனைகளை அம்மாவின் அரசு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நீங்கள் பாரதீய ஜனதா கட்சியோடு கூட்டணி வைத்து நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டீர்கள், மத்திய அரசிடமிருந்து எந்தத் திட்டத்தை பெற்றுத் தந்தீர்கள் என்று இன்றைக்கு பலர் கேட்கின்றார்கள். நாங்கள் கூட்டணி வைத்து ஐந்து மாதங்கள் தான் ஆகிறது. அந்த ஐந்து மாத காலத்தில், தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தியதன் காரணமாகவும், பாரதப் பிரதமரிடத்தில் நேரடியாக நான் கூறியதன் காரணமாகவும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சரிடத்தில் பலமுறை வலியுறுத்தியதன் விளைவாகவும், நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் அதைத் தொடர்ந்து பின்பற்றியதன் காரணத்தினாலும், தமிழகத்தில், ஒரே நேரத்தில், திருப்பூர், நீலகிரி, ராமநாதபுரம், திண்டுக்கல், நாமக்கல், விருதுநகர் ஆகிய இடங்களில் **6** மருத்துவக் கல்லூரிகளைக் பெற்றுத் தந்த ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்த **6** புதிய மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கியதன் விளைவாக **900** மாணவர்கள் ஒரே நேரத்தில் மருத்துவப் படிப்பு படிக்கக்கூடிய சூழ்நிலையை

உருவாக்கித் தந்த ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. மேலும், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், திருவள்ளூர் ஆகிய 3 மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதி வழங்க வேண்டும் என்றும் அதற்குண்டான நிதியை ஒதுக்க வேண்டுமென்றும் பாரதப் பிரதமரிடத்திலும், மத்திய சுகாதார அமைச்சரிடத்திலும் கோரிக்கை வைத்திருக்கின்றோம். அதுவும் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. நாங்கள் மத்திய அரசோடு இணக்கமாக இருந்த காரணத்தினால் தான் இவ்வளவு பெரிய திட்டங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம்.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்திய அரசுக்கு அடிமை அரசு என எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு பொய்யான பிரச்சாரத்தை சொல்லி வருகிறார்கள். அவர்கள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியிலே இருந்தார்கள், அப்பொழுதுதான் அடிமையாக இருந்தார்கள். தமிழகத்திற்கு அவர்கள் எந்தத் திட்டத்தைப் பெற்றுத் தந்தார்கள்? எவ்வளவு நிதியைப் பெற்றுத் தந்தார்கள்? எதுவுமே இல்லை. குடும்பம் தான் வளர்ந்தது, குடும்பம் தான் பதவி சுகத்தை அடைந்தது, குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் அதிகாரத்திற்கு வர முடிந்தது. ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியல்ல. தமிழகத்திற்கு நன்மை பயக்கின்ற திட்டத்தை ஆதரிப்போம், தமிழக மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் திட்டம் எதுவாக இருந்தாலும், அதை எதிர்க்கக்கூடிய மனநிலை இருக்கும் ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதை நாங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எங்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பை பயன்படுத்தி,

மத்திய அரசிடத்தில் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி, பாரதப் பிரதமர் அவர்கள் இன்றைக்கு பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி வழங்கி, அந்தத் திட்டங்களெல்லாம் நடைமுறைப்படுத்துகின்ற காட்சியை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு தவறான பிரச்சாரத்தை, பொய்யான பிரச்சாரத்தை மக்களிடத்தில் பரப்பி வருவதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதமாக இந்தத் திட்டங்களெல்லாம் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது என்பதை புள்ளிவிவரத்தோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

கீழடி கிராமத்தில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் அகழாய்வு செய்து கண்டெடுக்கப்பட்ட 6,720 தொல் பொருட்களை பொதுமக்கள் பார்வையிட்டு பயனடையும் வகையில், உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் கீழடி அகழாய்வு தொல் பொருட்கள் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை காட்சிப்படுத்த சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கொந்தகை கிராமத்தில் ஒரு புதிய உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் 12 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எதை, எந்த நேரத்தில் செயல்படுத்தவேண்டும் என்று எண்ணிப் பார்த்து செயல்படுத்துகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்று பொதுப்பணித் துறையின் சார்பில் சங்கரன்கோவில் தாலுகா, பனையூர் கிராமம், நிசபநதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை உட்பட 12 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள், பள்ளிக்கல்வித் துறை சார்பில்

3 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மேல்நிலைப் பள்ளி உட்பட 28 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை நான் இன்று திறந்து வைத்துள்ளேன்.

பொதுப்பணித் துறை சார்பில் 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியின் கூடுதல் கட்டடம் உட்பட 12 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள 6 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை 34 ஆயிரத்து 559 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 47,655 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்பதனையும், 24 ஆயிரத்து 90 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7,909 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன என்பதனையும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதையெல்லாம் எதற்காக சொல்கிறேனென்றால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து, நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை தமிழ்நாட்டிற்கு செய்த திட்டங்கள், அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கினோம், எவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது என்ற செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்திருக்கின்றேன். இதையெல்லாம் எதிர்க்கட்சிகள் தெரிந்துகொண்டு பேசவேண்டும் என்றும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

திருநெல்வேலியில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவின் போது அறிவிக்கப்பட்ட 47 அறிவிப்புகளில், இதுவரை 8 திட்டங்கள் முடிக்கப்பட்டும், 36 பணிகளுக்கான அரசாணைகள் வெளியிடப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலும் உள்ளன. 3 அறிவிப்புகள் மட்டும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட மக்களுக்கும் நலன் பயக்கும் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருவதை, திட்டங்களின் பயன்களை நுகர்ந்த மக்களாகிய நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஆனால் ஒரு சிலர், இந்த அரசைப் பற்றி தினந்தோறும் ஏதாவது குறைகளை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இங்கு ஒரு கதை எனக்கு ஞாபகம் வருகிறது.

ஓர் ஊரில் ஒரு முனிவர் இருந்தார். ஒரு நாள் அவரைப் பார்ப்பதற்காக ஒருவன் வந்தான். வந்தவன், "நான் ஒரு பாவி. என் பாவத்திற்கு மன்னிப்பு கிடைக்குமா?" என்று முனிவரிடம் கேட்டான். அவன் மீது இரக்கம் கொண்ட முனிவர், "நீ என்ன பாவம் செய்தாய் என்று சொல் பிறகு மன்னிப்பை பற்றி பேசலாம்", என்று சொன்னார்.

"நான் பிறரைப் பற்றி அவதூறு பேசினேன், பல காலமாக இப்படி அவதூறு பேசிக் கொண்டிருக்கிறேன், எனக்கு மன்னிப்பு கிடைக்குமா?" என்று கேட்டான். "உன் வீட்டில் தலையணை இருக்கிறதா?" என்று முனிவர் கேட்டார்.

பாவமன்னிப்பைத் தேடி வந்தவன் குழம்பிப் போனான். பாவமன்னிப்பைக் கேட்டால், உன் வீட்டில் தலையணை இருக்கிறதா என்று கேட்கிறாரே முனிவர் என்று குழப்பம் அடைந்தான்.

வீட்டிலிருந்த தலையணை எடுத்து வந்த அவனிடம் அதிலுள்ள பஞ்சுகளை நாலாபக்கமும் பறக்கவிடு என்றார் முனிவர். அவர் கூறியபடி அவனும் தலையணையில் உள்ள பஞ்சுகளை நாலா பக்கமும் பறக்க விட்டான். பின்பு முனிவரிடம் சென்று, ''நீங்கள் கூறியபடி எனது பாவத்திற்கு பரிகாரம் செய்து விட்டேன். இப்பொழுது மன்னிப்பு அருளுங்கள்'' என்று கேட்டான். ''பஞ்சை பறக்க விட்டால் பாவம் தீரும் என்று எப்பொழுது நான் சொன்னேன்? பறக்க விட்ட பஞ்சை எல்லாம் மீண்டும் எடுத்துவா – அப்போதுதான் உன் பாவம் தீரும்'' என்று முனிவர் சொன்னார். பதறிப்போன அந்த மனிதன், ''நாலா பக்கங்களிலும் பறந்துபோன பஞ்சை நான் எப்படி சேகரிப்பேன். பறக்க விடப்பட்ட பஞ்சை ஒன்றாக சேர்ப்பது இயலாத காரியம்'' என்று குழம்பிப் போனான்.

''பறக்க விடப்பட்ட பஞ்சை எப்படி மறுபடியும் சேகரிக்க முடியாதோ, அப்படித்தான் நீ பரப்பி இருக்கிற அவதூறுகளையும் உன்னால் திரும்பப் பெற இயலாது. அதனால் உனக்கு பாவ மன்னிப்பு என்றைக்கும் கிடையாது, நீ போகலாம்'' என்று சொல்லி முனிவர் அவனை அனுப்பி விட்டார்.

அந்த மனிதனைப் போல மாண்புமிகு அம்மா அவர்களை பற்றியும், மாண்புமிகு அம்மாவின் அரசைப் பற்றியும் குறை கூறியவர்கள் அன்றும் இருந்தார்கள். இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வாறு குறை கூறுவதையும், அவதூறாக பேசுவதையும்

தவிர, உருப்படியான காரியம் எதையும் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் செய்யவில்லை. எதிர்க்கட்சியாக இருக்கும் போதும் செய்வதில்லை. எனவே தான், பாவ மன்னிப்பு அளிக்க முடியாது என்று முனிவர் கூறியது போலவே, மக்களும் அவர்களுக்கு மன்னிப்பு அளிக்காமல் தகுந்த தண்டனையை தற்போது நடந்து முடிந்த இடைத்தேர்தல்கள் மூலம் அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் செல்கின்ற இடங்களிலெல்லாம் இந்த அரசு என்ன சாதனை படைத்திருக்கிறது? நாட்டு மக்களுக்கு என்ன திட்டங்களை கொடுத்திருக்கின்றது? இந்த அரசினால் மக்களுக்கு என்ன பயன்? என்று விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள், பழி சுமத்திக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி பழி சுமத்துபவர்களுக்கும், பொய் பிரச்சாரம் செய்கின்றவர்களுக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு என்னென்ன திட்டங்களை தமிழகத்தில் நடைமுறைப்படுத்தியிருக்கிறது என்ற விவரங்களை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த பெண்கள் திருமண வயதை அடைகின்றபொழுது, அந்தக் குடும்பத்தில் நிலவுகின்ற பொருளாதார சூழ்நிலையின் காரணமாக திருமணம் தடைபடுகின்றது. எனவே அவர்களின் திருமணத்தை அரசு உதவியின் மூலமாக உரிய நேரத்தில் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தாயுள்ளம் கொண்ட இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தை துவக்கினார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக **2011–2012** முதல் **2018–2019** நிதியாண்டு வரை **11,45,910** பயனாளிகளுக்கு சுமார் ரூ.**1,500** கோடி

மதிப்பிலான 5,260.72 கிலோ கிராம் தங்கம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இதன் மூலம் இந்த அரசு ஏழை, எளிய மக்களின் மீது எவ்வளவு அன்பு கொண்டுள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திருமண உதவித் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு சுமார் ரூபாய் 3,955 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக தாலிக்குத் தங்கத்துடன் திருமண உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி ரூபாய் 5,455 கோடியாகும். இந்தத் திட்டத்தின் வாயிலாக ஏழை, எளிய மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைவிட சிறந்த திட்டமென்று எது இருக்கின்றது ? இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மனதில் உதித்த இந்தத் திட்டம், இந்திய அளவிலே ஒரு சிறப்பான திட்டமாகும். அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்ற அரசு அம்மாவினுடைய அரசு. 2019–2020 ஆம் ஆண்டில் 1,04,795 பயனாளிகளுக்கு 838.36 கிலோ கிராம் தங்கம் சுமார் ரூ.291.20 கோடி மதிப்பில் வழங்கியிருக்கின்றோம். அதற்காக திருமண உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 415.21 கோடி நிதியுதவி வழங்கியிருக்கின்றோம்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலின் போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கையில், நான் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். ஒரு இருசக்கர வாகனத்திற்கு ரூ.20,000 மானியமாக வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அம்மா வழியில் வந்த அம்மாவின் அரசு, அது போதாது என்று கருதி, அம்மா இருசக்கர வாகனம் வாங்குவதற்கு ரூ.25,000 மானியம் வழங்கியது. அதன் வாயிலாக ரூ.362 கோடி

மதிப்பீட்டில் 1,54,592 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கி சாதனை படைத்த அரசு எங்களுடைய அரசு.

ஏழை, எளிய மக்கள் தங்களுடைய கிராமங்களிலேயே தகுந்த சிகிச்சை பெறுவதற்காக 254 ஆரம்ப சுகாதார நிலையங்களை துவக்கி வைத்த அரசு எங்களுடைய அரசு. அதேபோல 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன.

கடந்த 7 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் 6. அதேபோல சிவகங்கை, திருவண்ணாமலை, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கரூர், கோவை– ESI மற்றும் புதுக்கோட்டை, இவையெல்லாம் தற்போது தொடங்கப்பட்டது.

கடந்த 8 ஆண்டுகளில் 2.38 லட்சம் பயனாளிகள் அம்மா சஞ்சீவி கிட் பெற்றிருக்கிறார்கள். ஏழை, எளிய தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் கூட நலமோடு, சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள், 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் என்ற அற்புதமான திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் மூலம் 17.70 லட்சம் பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இந்த மண்ணிலே பிறக்கின்ற குழந்தைகள், அம்மாவினுடைய நலத் திட்டங்களை பெறுகின்றது என்று சொன்னால் எந்தளவிற்கு மக்களுடைய பிரச்சினைகளைஅம்மாவின் அரசு அணுகுகின்றது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 60.48 லட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ. 5,236.88 கோடி நிதியுதவி வழங்கியிருக்கின்றோம். இதன் காரணமாக, குழந்தை

பேறுகாலத்தில் உயிரிழக்கும் தாய்/சேய் விகிதத்தில் மருத்துவத் துறையில் 2030ல் எய்த வேண்டிய இலக்கினை இப்போதே தமிழ்நாடு அடைந்திருக்கின்றது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதலிடம் பெற்றுவருவதோடு, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக நான்காவது முறையாக பரிசு பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

வேளாண்மைத் துறையில், தொடர்ந்து “கிருஷி கர்மான்'' விருதை பெற்றுக் கொண்டிருக்கின்றோம். விலையில்லா ஆடுகள், விலையில்லா கறவை மாடுகள் ஆகியவைகள் வழங்குவதில் சாதனை படைத்திருக்கின்றோம். கிராம மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

வேளாண் மக்களின் உபதொழிலாக இருப்பது கால்நடை வளர்ப்பு. கால்நடைகளுக்கு நோய்வாய்ப்பட்டால், அதற்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு, அம்மா ஆம்புலன்ஸ் சேவையை துவக்கியதன் மூலமாக தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால், குறிப்பிட்ட தொலைபேசிக்கு நீங்கள் தொடர்பு கொண்டால், உடனடியாக அம்மா ஆம்புலன்ஸ் வந்து அந்த கால்நடைக்கு சிகிச்சை அளித்து குணமளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவினுடைய அரசு.

கல்வித் துறை சிறக்க வேண்டும் என்பதற்காக கடந்த 8 ஆண்டுகளில் 43,584 புதிய ஆசிரியர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டிருக்கின்றன. புதிதாக 248 ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 117 துவக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக, உயர்கல்வி படிப்போரின் எண்ணிக்கை உயர்ந்து இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

கிராமங்களில் வாழ்கின்ற ஏழை, எளிய குடும்பங்களிலிருந்து வருகின்ற மாணவ, மாணவிகள் சிறந்த மாணவர்களாக, அறிவுபூர்வமான மாணவர்களாக இருப்பார்கள். ஆகவே, உயர்கல்வி படிப்பதற்கும், சிறந்த கல்வி கற்பதற்கும் மடிக்கணினி அவசியம் தேவை. ஆனால், பொருளாதார சூழ்நிலை காரணமாக அந்த மடிக்கணினி வாங்க முடியாத ஒரு சூழ்நிலை. ஆகவே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மாணாக்கர் அறிவுபூர்வமான, விஞ்ஞானக் கல்வி பெற வேண்டுமென்பதற்காக ரூபாய் 12 ஆயிரம் மதிப்பிலான மடிக்கணினியை 48,54,134 மாணாக்கர்களுக்கு ரூபாய் 6857.52 கோடியில் வழங்கிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. உலகளவில் எங்கும் இதுபோன்று விலையில்லா மடிக்கணினி கொடுப்பது கிடையாது.

எங்களுடைய அரசு உள்ளாட்சித் தேர்தலை தள்ளிப் போடுவதற்காக பல்வேறு சூழ்ச்சிகளை செய்து கொண்டிருப்பதாக பத்திரிகை மற்றும் ஊடகங்களின் வாயிலாக ஒரு தவறான செய்தியை எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர். தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் ஆரம்பித்த நாள் முதல் 1996—ஆம் ஆண்டு வரை கவுன்சிலர்கள்

மூலமாகத்தான் மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் முறை நடைமுறையில் இருந்து வந்தது. **1996–**ஆம் ஆண்டு வரை மன்ற உறுப்பினராக தேர்தெடுக்கப்பட்டவர்கள் தான் மாநகர மேயர், நகராட்சி சேர்மன், பேரூராட்சித் தலைவர் ஆகியோரை தேர்ந்தெடுத்தனர்.அந்த நடைமுறை தான் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால், திரு.கருணாநிதி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், திரு.ஸ்டாலின் சென்னை மாநகராட்சியின் மேயராக வரவேண்டுமென்பதற்காக **1996–**ஆம் ஆண்டு நேரடியாக, மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் முறையை கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். மீண்டும், **2006–**ஆம் ஆண்டு அதனை மாற்றியமைத்ததும் திராவிட முன்னேற்றக் கழகம் தான். அப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் இப்பொழுது இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள். அப்பொழுது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு.ஸ்டாலின் அவர்கள் **31.8.2006** அன்று மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறைக்கு பதில், மறைமுகமாக தேர்ந்தெடுக்க சட்டமுன்வடிவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். இன்றைக்கு மறைமுகத் தேர்தலை எதிர்த்து கண்டனம் தெரிவிக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்றைய தினம் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து மறைமுக தேர்தல் கொண்டு வரவேண்டுமென்பதற்காக சட்டமன்றத்திலே அந்தத் தீர்மானத்தை அறிமுகப்படுத்தினார். **31.8.2006** அன்று திரு.ஸ்டாலின் கூறுகையில், அசாம், குஜராத் என்று பல மாநிலங்களைப் பட்டியலிட்டு

அங்கெல்லாம் மறைமுகத் தேர்தல் மூலம் தான் தலைவரை தேர்ந்தெடுக்கின்றார்கள் என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றக் கோரினார். மேலும், திரு.ஸ்டாலின் அவர்கள் **31.8.2006** அன்று தீர்மானத்தின் மீது பேசும்போது ‘‘மேயர் ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும், அதேபோல், மெஜாரிட்டியாக வரக்கூடிய உறுப்பினர்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்களாகவும் வந்துவிடுகின்ற காரணத்தினால் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை அவையிலே வைத்து, மன்றக் கூட்டத்திலே வைத்து, அதை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலைக்கு அது தள்ளப்படுகிறது. அதனால் மக்களுடைய பிரச்சினைகள் தேக்கம் அடையக்கூடிய நிலை இருக்கின்ற காரணம் ஒரு பக்கம், மேலும், உதாரணத்திற்கு விழுப்புரம், விருத்தாச்சலம் நகராட்சிகளில், **2001** தேர்தல் நடந்ததற்குப் பிறகு இதுவரையில் ஆகஸ்டு **2006** வரை அந்த இரண்டு நகராட்சிகளிலும் முறையாக கூட்டங்கள் நடைபெறவில்லை, முன்வைத்து நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானங்களும் அங்கே முழுமையாக நிறைவேற்றப்பட முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் கருத்திலே கொண்டு தான் இப்பொழுது இந்த முறையை நாங்கள் அமல்படுத்தியிருக்கின்றோம்” என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றித் தரக் கோரினார். **2019**–ஆம் ஆண்டிலும், பெங்களூர், மும்பை, ஹைதராபாத் போன்ற நகரங்களில் மறைமுகத் தேர்தல் மூலம் தான் மேயர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். **2016** மாநகராட்சி மேயர் பதவியில் மறைமுக தேர்தல் நடத்துவது குறித்து **22.6.2016** அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமுன்வடிவு தீர்மானத்தில் திமுக எம்.எல்.ஏ. மா.சுப்பிரமணியம் **23.6.2016** பேசும்பொழுது குறுக்கிட்டுப் பேசி இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் **23.6.2016** சட்டமன்றத்தில்

பேசிய அந்த உரை: "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கொள்கை முடிவு எடுக்கும்பொழுதும், பின்னர் அதை மாற்றிக்கொள்வதும் மாநில அரசின் உரிமை. ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில்கூட அவர்கள் ஒரு கொள்கை முடிவு எடுத்து, பின்னர் அதை மாற்றியிருக்கின்றார்கள். உதாரணத்திற்கு, மீத்தேன் எரிவாயு திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதே திமுக அரசு தான். இப்பொழுது அதை அவர்களே எதிர்ப்பதாகக் கூறுகிறார்கள். அது கொள்கை முடிவில் ஏற்பட்ட மாற்றமில்லையா? அதுபோலத்தான் ஏற்கனவே எங்கள் ஆட்சியில் ஒரு முடிவு எடுத்திருந்தாலும் இன்றைக்கு ஒரு கொள்கை மாற்றம் ஏற்படுகின்றது" என்ற விளக்கத்தை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றே சட்டமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றார்கள். அம்மா அவர்கள் கூறியது: மீத்தேன் மட்டும். ஆனால், அவர்கள் மத்தியில் ஆட்சியில் இருக்கும்பொழுது கையெழுத்துப் போட்டுவிட்டு இங்கு இரட்டை வேடம் போடுவதை நாம் சொல்லிக் கொண்டேயிருக்கலாம். மீத்தேன், இயற்கை எரிவாயு அனுமதி, நீட் தேர்வு, ஜல்லிக்கட்டுக்குத் தடை, நியூட்ரினோ ஆய்வுக்கு அனுமதி போன்ற மக்கள் நலனுக்கு எதிரான கொள்கை முடிவுக்கு அங்கே மத்தியில் அனுமதி தந்துவிட்டு, தற்போது மக்கள் அதனை மறந்துவிட்டார்கள் என்று எதிர்ப்பு நாடகம் நடத்துகிறார்கள். ஆகவே, எங்களைப் பொறுத்தவரைக்கும், உள்ளாட்சித் தேர்தல் நடைபெற வேண்டுமென்பது தான் எண்ணம். அதை நடைமுறைப்படுத்துவது மாநிலத் தேர்தல் ஆணையம். உச்சநீதிமன்றத்தில் மாநிலத் தேர்தல் ஆணையம் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கின்றது. ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும் தேர்தல் நடக்க வேண்டும், உறுதியாக நடக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்தே இல்லை என்பதை தெளிவுபடுத்துகின்றேன்.

அதுமட்டுமல்ல, தோல்வி பயத்தால்தான் இப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், நீங்கள் அப்பொழுது கொண்டு வந்தது சரியா? கிராமப்புறங்களில் சொல்வதைப்போல "மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்" என்று திரு.ஸ்டாலின் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர்கள் கொண்டு வந்தால் அது சரியான திட்டம் என்கிறார்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தால் அது தவறான திட்டம் என்கிறார். ஆகவே, வேண்டுமென்றே, பொய்யான, தவறான செய்தியை பரப்பி, உள்ளாட்சித் தேர்தலை தடை செய்வதற்கு திரு.ஸ்டாலின் முயற்சி செய்து கொண்டிருக்கிறார். அது நிச்சயம் முடியாது. உச்சநீதிமன்றம் அளிக்கின்ற ஆலோசனையின் பேரில் மாநில தேர்தல் ஆணையம் இந்தத் தேர்தலை நடத்தும் என்று இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அம்மா அரசின் சாதனைகள் பலவற்றை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

வீரவாஞ்சிநாதன் மற்றும் மாவீரன் ஒண்டிவீரன் ஆகியோருக்கு தமிழக அரசு சார்பில் புதிதாக நினைவு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாநகராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ், ரூபாய் 289 கோடியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பல்வேறு இடங்களில் தடுப்பணை கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளீர்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், அரசின் பரிசீலனையில் இருக்கின்ற சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், திருப்புடைமருதூர் கிராமம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், இராஜவள்ளிபுரம் கிராமம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூபாய் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திருவண்ணநாதபுரம் கிராமம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே சுமார் ரூபாய் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர் முழுதையும் தடுத்து நிறுத்தி, நிலத்தடி நீர் உயர வேண்டுமென்ற அடிப்படையில் ஆங்காங்கே தடுப்பணைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன் மூலமாக தாமிரபரணி ஆற்றின் குறுக்கே மூன்று இடங்களில் தடுப்பணை கட்ட அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்ற விவரத்தை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டம், சூளங்கோடு கிராமம் அருகே பழையாற்றிலிருந்து வரும் நீர் முழுதும் உபரியாக கடலில் கலக்கின்றது. ராதாபுரம் கால்வாய், தோவாளை கால்வாயின் கடைமடைப் பகுதிக்கு போதுமான நீர் வரத்து கிடைக்கவில்லை. ராதாபுரம் கால்வாய் பகுதியில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்கான தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. எனவே, தற்போது பழையாற்றின் கடைசி அணைக்கட்டிலிருந்து உபரியாக கடலுக்குச் செல்லும் 922 மில்லியன் கனஅடி நீரில் 645 மில்லியன் கனஅடி நீரை நீரேற்று மூலம் ராதாபுரம் கால்வாய் பகுதியில், நிலத்தடி நீர்மட்ட உயரவும், மேலும் ராதாபுரம் கால்வாயின் ஆயக்கட்டுப் பகுதியான 15,980 ஏக்கர் நேரடிப் பாசனமும், 1020 ஏக்கர் மறைமுகப் பாசனமும் மற்றும் 52 குளங்கள் பாசன வசதி பெறும் இத்திட்டத்தில் 2 மின் மோட்டார் பம்பு மூலம் தண்ணீர் நீரேற்றம் செய்யப்படும். இந்தத் திட்டத்திற்குத் தேவையான மின்சாரம் சூரிய மின்சக்தி மூலம் பெறப்படும். இத்திட்டத்தை செயலாக்கம் செய்வதற்கு நிலஎடுப்புப் பணி ஏதும் தேவையில்லை. இத்திட்டம் தோராயமாக ரூபாய் 170 கோடியில் நிறைவேற்றப்படும்.

தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் நில எடுப்புப் பிரச்சினைகள் இருந்த காரணத்தினாலே காலதாமதம் ஆயிற்று. நிலை ஒன்று, நிலை இரண்டு ஆகிய இரண்டிலும் சுமார் 94 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. 2020–க்குள் முதல் மற்றும் இரண்டாம் நிலை முழுவதும் நிறைவேற்றப்படும். நிலை மூன்றில் 48 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. நிலை நான்கில் பணி துவங்கப்பட்டு, டிசம்பர், 2020–ல் முடிக்கப்படும். தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் 2020–ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்பட்டு தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை

தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 561.88 கோடி மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 32 கிராமங்களும் 13,481 ஹெக்டேர் நிலங்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 18 கிராமங்களில் 9,559 ஹெக்டேர் நிலங்களும் என மொத்தம் 23,040 ஹெக்டேர் நிலங்கள் பயிர் செய்யப்படும் நிலையை எங்கள் அரசு உருவாக்கித் தரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள தென்காசி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக இங்கே சில அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோயிலில் இருபாலர் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரூபாய் 8 கோடியே 60 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தில் ரூபாய் 9 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்படும்.

மழை நீரை முறையாக சேமித்து, பாசன பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, தென்காசி மாவட்டத்தில் சித்தாறு உபவடி நிலத்தில் 22.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தென்காசி, கடையநல்லூர், செங்கோட்டை, ஆலங்குளம், கீழப்பாவூர் மற்றும் மேலநீலிதநல்லூர் ஆகிய ஒன்றியங்களில், சுமார் 6,000 ஹெக்டேர் பாசன நிலங்கள் பயனடையும் வண்ணம், 395 நீர்ப்பாசன கட்டமைப்புகள் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் விரைவில் முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

கடையநல்லூர் வட்டம், சிந்தாமணி கிராமத்தில் கோட்டமலையாற்றின் குறுக்கே 1 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும். கடையநல்லூர் வட்டம், சிந்தாமணி கிராமம், கோட்டமலையாற்றின் குறுக்கே ரூபாய் 1 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் படுகை அணை அமைத்து வண்ணநேரி, சகலநேரி, மலையடிகுறிச்சி ஆகிய குளங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும். கடையநல்லூர் வட்டம், சிந்தாமணி கிராமம் கோட்டமலையாற்றின் குறுக்கே 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படுகையணை அமைத்து, தாருகாபுரம், சிறுகுளம் மற்றும் அதனைச் சார்ந்த குளங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

வீரகேரளம்புதூர் வட்டம், வீராணம் பெரிய குளத்திலிருந்து செல்லும் காசிக்குவாய்தான் வழங்கு கால்வாயிலிருந்து காவலாக்குறிச்சி பெரியகுளத்திற்கு புதிய கால்வாய் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சிவகிரி வட்டம், இராயகிரி கிராமம் உள்ளாற்றின் குறுக்கே 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைத்து மேலகரிசல் குளத்திற்கு தண்ணீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். சிவகிரி வட்டம், தென்மலை கிராமம் உள்ளாற்றின் குறுக்கே 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைத்து கன்னசேம்பல் குளத்திற்கு தண்ணீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

இது தவிர, இம்மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைகளை மேலும் சிறப்பாக நிறைவேற்றும் வகையில், சங்கரன்கோவில், புளியங்குடி மற்றும் திருவேங்கடம் பேரூராட்சிகளுக்கான 18.39 MLD கூட்டுக் குடிநீர்த் திட்டம் 147 கோடி ரூபாய்

மதிப்பீட்டிலும், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங்களைச் சேர்ந்த 147 ஊரகக் குடியிருப்புகளுக்கான 12.43 MLD கூட்டுக் குடிநீர்த் திட்டம் 31.32 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி, கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான 9.27 MLD கூட்டுக் குடிநீர்த் திட்டம் 47 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்கள் விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொண்டு, பல்வேறு திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அண்மையில் நடைபெற்று முடிந்த நாங்குநேரி, விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல்களும் இன்றைக்கு தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற சான்று வழங்கிய தேர்தல். இந்த ஆட்சியிலே ஒன்றும் நடைபெறவில்லை, இந்த ஆட்சியிலே மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு இந்தத் தேர்தல் மூலமாக இந்த ஆட்சி சிறப்பான ஆட்சி, நாட்டு மக்களுக்கு நல்லது செய்கின்ற ஆட்சி என்று சான்று வழங்கியது இந்த சட்டமன்ற தேர்தல் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**